‘இந்த அறிக்கையின் மூலப் பிரதி சிங்கள மொழியில் உள்ளது. இது அச்சிங்கள மொழி மூலமான அறிக்கையின் நிறைவேற்றுச் சுருக்கத்தின் அதிகாரப்பூர்வமற்ற தமிழ் மொழிபெயர்ப்பாகும்.’

சமூக மற்றும் அமைதி மையம்

இலக்கம் *281.* டீன்ஸ் வீதி,

கொழும்பு *10*

**<u>மேல்முறையீட்டு விசாரணை *RTIC/Appeal/1132/2022*</u>**

*2016*ஆம் ஆண்டின் *12*ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் கீழ், *24.06.2022* ஆம் திகதி உங்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையுடன் தொடர்புடையது.

எனது சம இலக்கம் மற்றும் *23.02.2023* திகதியிடப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உங்கள் தகவல் கோரிக்கையின் இலக்கம் *1*-ன் கீழ் கோரப்பட்டுள்ள தனிநபர் குழு அறிக்கையின் பிரதியை வழங்குவது தொடர்பாக, மாண்புமிகு சட்டமா அதிபரிடமிருந்து எனக்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளதுடன் குறித்த தனிநபர் குழுவின் அறிக்கை இத்துடன் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

தகவல் அதிகாரி எம்.எம்.அலிஃப்

சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்)

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

தொலைபேசி *: 0112 331535*

தொலைநகல் *: 0112 320785*

மின்னஞ்சல் முகவரி*: sasadmin1@moj.gov.lk*

பிரதி -

*01.* பணிப்பாளர் நாயகம், தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு - உங்கள் இல. *RTIC/Appeal/1132/2022* மற்றும் *13.02.2023* திகதியிடப்பட்ட கடிதத்தின் படி – தகவல் தெரிந்து கொள்ளவகற்காக

## 3. தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கை

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ம் திகதியன்று, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புணர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சராக திரு. லோகன் எவிந்திர ரத்வத்த அவர்கள் ,கௌரவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். எனவே, அவர் அந்தப் பதவியில் இருந்த காலத்தில், சிறைச்சாலைகளைக் கண்காணிக்கும் முழுப் பொறுப்பும், கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் கொள்கை செயல்முறைக்கு மேலதிகமாக மறுஆய்வு முறையின் மூலம் சிறப்பு மன்னிப்பு வழங்குவதற்கான பொறிமுறையைத் தயாரிப்பது, கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கவும், சிறை அதிகாரிகளை சந்தித்து அவர்களின் பிரச்னைகளை கண்டறியவும் பூரண அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், இம்முன்னாள் இராஜாங்க அமைச்சர் 2021 செப்டெம்பர் 06 ஆம் திகதியன்று வெலிக்கடை சிறைச்சாலைக்கும், 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் 12 ஆம் திகதியன்று அனுராதபுரம் சிறைச்சாலைக்கும் மேற்கொண்ட விஜயங்கள், பிற்காலத்தில் சிலர் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருப்பதுடன் மற்றும் அது விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளது.

இதன்படி, அமைச்சரவை அமைச்சர்களின் விருப்பத்தின் பேரில் தனிநபர் குழுவொன்றை நியமிக்கும் தீர்மானத்தின்படி, உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து, அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய விரிவான அறிக்கையை 60 நாட்களுக்குள் இலங்கைக் குடியரசிற்குச் சமர்ப்பிப்பதற்காக, கௌரவ நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி திரு எம்.யூ.எல். அலி சப்ரி அவர்களால் 2021 செப்டம்பர் 23 ம் திகதியிட்ட கடிதம் மூலம், என்னை மேற்படி தனி நபர் குழுவில் நியமித்தார்.

கௌரவ நீதி அமைச்சரின் மேற்குறிப்பிட்ட கடிதத்தின் மூலம், சிறைச்சாலை வளாகத்தை பார்வையிடவும், உரியவர்களிடம் விசாரித்து, தேவையான ஆதாரங்களைப் பதிவு செய்யவும், கிடைக்கும் தகவல்களைப் பெறவும் சுவாதீன அவதானிப்பாளராக செயல்படவும் இத் தனிநபர் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலும் குறித்த குற்றம் சாட்டப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை சேகரித்த பின்னர் குழு அறிக்கையை சமர்ப்பிக்க 2 மாதங்கள் குறுகிய கால அவகாசமே வழங்கப்பட்டிருந்தது. எனவே, சம்பவத்தை அவதானித்து அனைத்து அதிகாரிகள் மற்றும் கைதிகளிடம் சாட்சியம் பெறுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் போதுமானதாக இல்லை.

அத்துடன் வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் சிசிடிவி கமராக்கள் பொருத்தப்படவில்லை. எனவே, எழுத்து மற்றும் வாய்மொழி ஆதாரங்களின் அடிப்படையில் மாத்திரமே தகவல்களை சேகரிக்க வேண்டும்.

எனினும், உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிய, அந்தந்த இடங்களில் கடமையாற்றிய சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலைகளுக்கு வெளியேயும் சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டிருந்த கைதிகளின் என பலரிடமும் வாய்மூலமான சாட்சியங்கள் பெற்றுத் தகவல் திரட்டப்பட்டது. இந்த குறுகிய கால கட்டத்தில் பெறப்பட்ட வாய்மூலமான சாட்சியங்களின் மொத்த எண்ணிக்கை *40* ஆகும். இது தவிர திரு.லோகன் எவிந்திர ரத்வத்த அவர்கள் வழங்கிய சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது.

மேலும், வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் பராமரிக்கப்படும் புத்தகங்களில், அந்தந்த திகதிகளில் எழுதப்பட்ட குறிப்புகளுடன் கூடிய அனைத்து ஆவணங்களும் கண்காணிக்கப்பட்டு அவற்றின் உண்மையான பிரதிகள் பெறப்பட்டன. அத்துடன், மேற்படி இராஜாங்க அமைச்சர் விஜயம் செய்த இடங்களை அவதானித்து, தோராயமான திட்டங்களை எழுத்து மூலமான ஆதாரங்களாகப் பெற்றுக்கொண்டேன்.

• முன்னாள் இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்த அவர்கள் வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்த நேரங்கள் மற்றும் அவர் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய விதம் தொடர்பான விடயங்கள்:-

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு விஜயம் செய்தமை தொடர்பில், இக்குழுவினரால் சேகரிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், *06.09.2021* மாலை *5.30* மணியளவில் சிறைச்சாலைக்குள் நுழைந்த அவர், முதலில் செப்பல் பிரிவில் அமைந்துள்ள தூக்கு மேடை இருந்த அறையை பார்வையிட சென்றுள்ளாரதாகவும், அந்த அறைக்கு செல்லும் வழியில், இருபுறமும் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளிடம் பேசியதும், தொலைபேசி அறைகள் அமைந்துள்ள இடத்திற்குச் சென்று அங்கு சிறிது நேரம் இருந்துவிட்டு, சிறைச்சாலை கண்காணிப்பாளர் அலுவலத்துக்குச் சென்று, அங்கு சிறிது நேரம் செலவிட்ட பின்பு, அன்று மாலை *6.15* மணியளவில் புறப்பட்டுச் சென்றுள்ளதாக தகவல் கிடைக்க பெற்றன.

அனுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தமை தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி *12.09.2021* அன்று மாலை சுமார் *5.45* மணியளவில் அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் பிரவேசித்து முதலாவதாக *'F'* பிரிவில் அடைக்கப்பட்டிருந்த *18* விசேட பிரிவு கைதிகளினுல், *10* கைதிகள் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளை *"F'* பிரிவில் அருகில் உள்ள முற்றத்திற்கு அழைத்துப் பேசிவிட்டு, *'F'* பிரிவுக்கு சென்று அங்குள்ள சில கைதிகளிடம் பேசிவிட்டு, வெளியே வந்து சிறிது நேரம் இருந்துவிட்டு, உதவி சிறைச்சாலை கண்காணிப்பாளர் அலுவலத்துக்குச் சென்று, அங்கு சிறிது நேரம் செலவிட்ட பின்பு, இரவு *7.00* மணியளவில் திரும்பியதாகவும், இக் குழுவிற்கு தகவல் கிடைத்துள்ளது.

பல்வேறு சட்டங்களால் திருத்தப்பட்ட, 1877 ம் ஆண்டு 16 ம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்தின் இன் பிரிவு 39(2) இன் படி, ஒரு செனட் சபை அங்கத்தவர், பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட அல்லது நீதவான் நீதிபதி ஆகியோருக்கு ஒரு குறிப்பிட்ட சிறைச்சாலை மற்றும் கைதிகளின் பொதுவான நிலையை காலை 5.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை பார்வையிடலாம்.

இவ்வாறு, முன்னாள் இராஜாங்க அமைச்சர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சர் என்ற வகையிலும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் 09.06.2021 அன்று சிறைச்சாலைகளைக் கண்காணிக்கும் முழு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கடமையையும் வைத்திருக்கிறார், எனினும் 06.09.2021 அன்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு மற்றும் 12.09.2021 அன்று அனுராதபுரம் சிறைச்சாலைக்கான விஜயங்கள் சட்டத்தினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மீறி மேற்படி சட்டத்தின் 39(2) உப பிரிவை முழுமையாக மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்டதை நான் அவதானிக்கிறேன்.

இது தவிர 06.09.2021 அன்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் இரண்டு அல்லது மூன்று சிவில் நபர்களை அழைத்துச் செல்லப்பட்டமை சாட்சியங்களிலிருந்து தெரியவந்துள்ளதுடன் இவ் இரண்டு நபர்களும் எதன் அடிப்படையில் சிறைச்சாலைக்குள் அழைத்துவரப்பட்டனர் என்பது தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விளக்கமளிக்க தவறியுள்ளார்.

மேற்படி சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 35ம் பிரிவு முதல் 39 பிரிவு வரை, அமைச்சரால் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களால் மட்டுமே சிறைச்சாலைகளை கண்காணிக்க முடியும். மேலும், மேற்படி சட்டத்தின் 36(3)ம் துணைப்பிரிவின்படி, ஒவ்வொரு வருகையாளரும் சிறைச்சாலை ஊழியர்களுக்கு அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதற்காக சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி ஒழுக்கத்தையும் நல்ல நிர்வாகத்தையும் பேணுவதற்கும் கடமைப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த சட்டத்தின் 39(2) பிரிவின் படி, செனட்டர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் விருந்தினர் புத்தகத்தில் தங்கள் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளிடுவது அவசியம்.

மேற்கண்ட சரத்துகளைக் கருத்தில் கொண்டால், சிறைக்குள் நுழையும் பார்வையாளர்கள், சிறையில் கடைபிடிக்கப்படும் ஒழுக்கத்தை மதித்து, அதைப் பாதுகாப்பது மிகவும் அவசியம் என்பது தெளிவாகிறது.

சிறைத்துறைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர், அவரது கருத்துப்படி, ஒதுக்கப்பட்ட அதிகாரத்தை மீறுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய செயல் அல்ல, இது கீழ்நிலை அதிகாரிகளுக்கு முன்மாதிரியான செயல் அல்ல, மேலும், இராஜாங்க

அமைச்சர் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தை இழிவு படுத்தும் செயலாக பார்க்கப்படுவதையும் அவதானிக்கிறேன்.

இது தவிர வெலிக்கடை சிறைச்சாலையை கண்காணிப்பதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் கால்களில் இரண்டு செருப்புகளை அணிந்து கொண்டு கட்டை கால்சட்டையும், டி-சர்ட் அணிந்து வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அது மற்றுமின்றி, டெனிம் கால்சட்டை மற்றும் நீண்டகை சட்டையுடன் கூடிய ஜெர்சியுடன், மற்றும் காலில் இரண்டு செருப்புகளுடன் மாத்திரம் அவர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு வந்திருக்கவில்லை. மேலும், *'F'*பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்து சிறப்பு பிரிவு கைதிகள் மற்றும் சந்தேக நபர்களை, அமைச்சரின் உத்தரவின் பேரில் *''F'*பிரிவு முற்றத்திற்கு அழைத்து வரப்பட்டதுடன், இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டில் பிஸ்டல் போன்ற துப்பாக்கியை ஏந்தியபடி குடிபோதையில் நடந்து வந்ததும் தெரியவந்தது. முன்னாள் இராஜாங்க அமைச்சர், சிறைச்சாலையை அவதானிக்கச் சென்றிருப்பது சாதாரண நபராக அல்ல எனவும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சராக, இலங்கைக் குடியரசைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. அதன்படி, இலங்கைக் குடியரசைக் குழிதோண்டிப் புதைக்காத வகையில் செயற்படும் முழுப் பொறுப்பும் முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு இருந்ததை அவதானிக்கின்றேன்.

சந்தேக நபர்களும் கைதிகளும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களை இழிவுபடுத்தும்/அல்லது அவமதிக்கப்படும் வகையில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உயர்பதவியாளர்/உயர் அதிகாரி செயற்பட நினைப்பது ஏற்புடையதல்ல. மேலும், 'சிறைச்சாலை' என்பது முறையான ஒழுக்கத்துடன் பராமரிக்கப்படும் ஒரு நிறுவனமாகும். அங்கு பணிபுரியும் அனைத்து அதிகாரிகளும் சீருடை அணிந்து இருக்க வேண்டியதுடன், நினைவிழந்த படி குடிபோதையில் செயல்படக்கூடாது.

மேலும், பல்வேறு சட்டங்களால் திருத்தப்பட்ட *1877*ம் ஆண்டின் *16* ம் இலக்க சிறைச்சாலைகள் சட்டத்தின் *79(1)* முதல் *79(5)* வரை பிரிவுகளின் வழங்கப்பட்டுள்ளபடி மாத்திரமே துப்பாக்கியை சிறையில் பயன்படுத்த முடியும். எந்தவொரு சட்டவிரோத செயலையும் செய்யாத கைதிக்கு எதிராக துப்பாக்கியை பயன்படுத்த முடியாது.

எனவே, சிறைச்சாலையின் உயர் அதிகாரிகளாலும் மதிக்கப்படும் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில், உரிய ஆடைகளை அணிந்து, கவனமுடன் செயற்படுவது, சிறைச்சாலைக்குள் துப்பாக்கி ஏந்துவதைத் தவிர்ப்பது போன்ற பொறுப்பு முன்னாள் அமைச்சருக்கு இருந்தது. மேலும், சிறைச்சாலையில், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகள் 'லோஹான் ரத்வத்த' என்ற

பெயரை அல்ல, முன்னாள் இராஜங்க அமைச்சரின் பதவியை தான் மதிக்கின்றனர். தனது பதவிக்கு களங்கத்தை ஏற்படுத்தாத வகையில் நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பு முன்னாள் இலாஜாங்க அமைச்சருக்கும் இருந்தது.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு, இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் *06.09.2021* அன்று வெலிக்கடை சிறைச்சாலைக்கும், *12.09.2021* அன்று அனுராதபுரம் சிறைச்சாலைக்கும், இராஜாங்க அமைச்சர் பதவியும் இலங்கைக் குடியரசின் பெருமையும் களங்கப்படுத்தப்பட்டு/அல்லது கேலி செய்யப்படுவதாகத் தோன்றுவதால், அந்த விஜயங்களின் போது இலங்கைக் குடியரசின் கௌரவமும், இராஜாங்க அமைச்சர் பதவியும் சேதப்படுத்தப்பட்டுள்ளதை நான் அவதானிக்கிறேன்.

மேலும், முன்னாள் இராஜாங்க அமைச்சரின் கூற்றுப்படி, வெலிக்கடை சிறைச்சாலைக்கு *06.09.2021* அன்று, கண்காணிப்பதற்காகச் சென்றிருந்தார்.

*(i)* சேப்பல் பிரிவில் உள்ள தூக்கு மேடையை கண்கானிக்க

*(ii)* நான்கு வருட மீளாய்வு தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டதால், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை தெரிந்து கொள்வதற்காக

சேப்பல் பிரிவில் *A1, A2, A3, B1, B2, B3* மற்றும் *C1, C2, C3* ஆகிய மூன்று கட்டிடங்களில் சுமார் *800* கைதிகளும், சி*3* பிரிவு அறைகளில் சுமார் *70-80* கைதிகள் அமர்த்தப்பட்டு இருந்தாலும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சேப்பல் பிரிவின் *C3* சிறப்புப் பிரிவிலுள்ள தூக்கு மேடைக்கு செல்லும் வழியில் இருபுற அறைகளில் *10* முதல் *20* கைதிகள் மட்டுமே இருந்தனர். அவர்களுடன் *10* முதல் *15* நிமிடங்கள் நேரம் மாத்திரமே செலவழித்துருந்தார். இக் கைதிகளைத் தவிர, மேலும் ஒரு கைதியிடம் மாத்திரமே கதைதிருக்கிறார். தொலைபோசி அறைக்கு அருகில் இருந்த கைதிகளுடனே அவ்வாறு கதைதுள்ளார். சிறு பூச்சிகளுக்கு கூட தேவைப்படும் 'சுதந்திரம்' கைதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த விஜயத்தின் முழு நேரத்திலும் கைதிகளுடன் கலந்துரையாடிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் எட்டிய ஒரே முடிவாக இருந்தது. அந்த முடிவை எடுக்க ஒரு பயணம் தேவையில்லை. இது பொது அறிவுடன் தொடர்புடையது.

மேலும், இந்த விஜயத்தின் போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் எந்தவொரு கைதியின் விளக்கத்தையும்/அல்லது அறிக்கையையும் கேட்கவில்லை. பேசுவதை மாத்திரமே செய்துள்ளார். எந்தவொரு கைதிகளுடனும் நான்கு வருட மதிப்பாய்வோ அல்லது வேறு ஏதேனும் முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கு சென்றதாக காணப்படவில்லை.

மேலும், தூக்கு மேடையினை அவதானிக்க சென்றிருந்த போதிலும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் அதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும்

தெரிவித்திருக்கவுமில்லை. 5 மாதங்களுக்கு முன்னர் அவாதானிக்கப்பட்ட தூக்கு மேடைக்கு அருகாமையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அதிக நேரம் தங்கியிருந்ததாகவும், அதில் தீர்க்கப்பட வேண்டிய எந்த பிரச்சினையும் இருக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு, தாம் ஏன் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பதை விளக்க முடியாத சிவில் உடையில் வந்த இரண்டு அந்நியர்களுக்கு தூக்குக் கயிற்றைக் காட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் *06.09.2021* அன்று வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றிருந்ததை நியாயமாக அவதானிக்க முடியும்.

*I.* நான் மேற்கூறியவற்றின் அடிப்படையில், முன்னாள் சிறைச்சாலைகள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்த, 'இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்' கௌரவத்தையும், " சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சு பதவியின்" கௌரவத்தையும் குழிபறிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார் என்பதையும்,

*II.* பொருத்தமற்ற நேரத்தில் சிறைச்சாலைக்குள் பிரவேசித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர், - *1977*ஆம் ஆண்டு *16*ஆம் இலக்க சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் *35* தொடக்கம் *39* வரையான பிரிவுகளுக்கு உட்பட்ட சிவில் உடை அணிந்த இரண்டு அல்லது மூன்று பேர் எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல், சிறைச்சாலைக்குள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதுடன், ஆனால் அப்பிரிவு சட்டத்தை மீறும் எந்தவொரு நபருக்கும் வழங்கக்கூடிய தண்டனையை பற்றி சட்டம் குறிப்பிடவில்லை.

❖ சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான முன்னாள் இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்தை அவர்களின் 'குற்றத்தின் தன்மையை' பரிசீலித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைக்கின்றேன்.

- **முன்னாள் இராஜாங்க அமைச்சரின் உத்தரவின் பேரில் அனுராதபுரம் சிறைச்சாலையின் '*F*'பிரிவுக்கு அருகிலுள்ள முற்றத்திற்கு வரவழைக்கப்பட்ட பத்து கைதிகளுடனான சந்திப்பு:-**

"உங்களிடம் துப்பாக்கிகள் மற்றும் தொலைபேசிகள் இருந்தால், தயவுசெய்து அவற்றை வெளியே வைத்து விட்டு வாருங்கள்." சிறைச்சாலையின் பிரதான மர கதவு நுழைவாயிலுக்கு அருகில் பிரதான சிறைச்சாலை அதிகாரி வழங்கிய அறிவிப்பை அடுத்து, முன்னாள் இராஜாங்க அமைச்சருடன் வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் துப்பாக்கிகள் மற்றும் தொலைபேசிகளை வாகனத்தில் வைத்துவிட்டுச் சென்ற போதிலும்,.அமைச்சர் அவ்வாறு செய்யவில்லை.

முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு இருந்த மரியாதையினால் முன்னாள் அமைச்சரை சிறைச்சாலை அதிகாரிகள் சோதனைக்கு உற்படுத்தவில்லை. மேலும், துப்பாக்கிகள், வெடிபொருட்கள், போதைப்பொருட்களை மக்கள் கொண்டுசெல்கிறார்களா என்பதை அறிய சிறைக்குள் வாக் த்ரூ ஸ்கேனர் *(Walk Through Scanner)* இல்லாததால், முன்னாள் இராஜாங்க அமைச்சர் தனது துப்பாக்கியை எளிதாக எடுத்துச் செல்ல முடிந்தது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, *10* கைதிகள் *'IF'* பிரிவுக்கு அருகிலுள்ள முற்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர், அவர்களுக்கு வழக்குகள் தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், அவற்றை முன்னாள் இராஜாங்க அமைச்சரிடம் முன்வைத்து, கௌரவ ஜனாதிபதிக்கு தெரிவிக்கவ முடியும் எனவும், அவ்வாறு வழக்குகளை விரைவாக முடிவுறுத்த ஏற்பாடு செய்ய முடியும் எனவும் இது குறித்து முதலில் கைதிகளுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கைதிகள் ஒவ்வொருவரிடமும் அவர்களின் வழக்குகள் மாத்திரமின்றி, அவர்கள் என்ன தவறு செய்தார்கள், சிங்கள மக்களைக் கொன்றார்களா என்றும் கேட்டறிந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர், "உண்மையைச் சொல்லுங்கள், உண்மையைச் சொல்லுங்கள்" எனக் கேட்டு, அவர்களுக்கு தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள கட்டாயப்படுத்தியிருந்தார்.

மேலும், குறித்த கைதிகளுடனான சந்திப்பின் போது முன்னாள் இராஜாங்க அமைச்சரின் இடுப்பில் இருந்த துப்பாக்கியும் காணக்கூடிய வகையில் இருந்தமை அறிய கிடைத்துள்ளது.

மேலும், அரை வட்ட வடிவில் இருந்த கைதிகளில் முதன்மையானவரான பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றத்திற்காக வவுனியா நீதவான் நீதிமன்ற வழக்கு இல: *B.13/19* இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பூபாலசிங்கம் சூரியபாலனிடம் முன்னாள் இராஜாங்க அமைச்சர், "எங்கள் மக்கள் எத்தனை பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்" என்று கேட்டபோது, அப்படி எதுவும் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பேரில் தான் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் கூறியபோது, அவர் "பொய்" சொல்கிறார் எனத் தெரிவித்து, கூழாங்கள், மணல் மற்றும் கற்கள் நிறைந்த கரடுமுரடான தரையில் மண்டியிடச் சொல்லியிருந்தார்.

அதன்பின் அரைவட்டாரத்தில் ஒன்பதாம் இடத்தில் இருந்த 'மதிஅராசன் சுலக்ஷன்' என்ற கைதியிடம் சென்று, 'உண்மையைச் சொன்னால் மன்னித்துவிடுவேன்' எனக் கூறி, விடுதலை புலிகள் அமைப்பில் இருந்தாறாரா என்று கேட்ட போது, , "விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தேன், வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது," என கூறிய போது " சிங்கள மக்களை கொலை செய்தீர்களா?" அவர் அதற்கு "இல்லை" என கூறிய போது " பொய் சொல்கிறாய்" என்று கூறி மேற்கூறப்பட்ட சூரியபாலன் எனும் நபரை

மண்டியிட்டு இருந்த இடத்திற்கு அருகில் சென்று அவ்வாறே செய்யும் படி கூறி சுலக்னை எனும் நபரையும் தரையில் மண்டியிட செய்துள்ளார்.

இவ்வாறு 'F'பிரிவில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்ட கைதிகள் 2 மணி நேரத்திற்கும் மேலாக ''F'பிரிவுக்கு அருகிலுள்ள முற்றத்தில் தங்கியிருந்த நிலையில், 'சூரியபாலன்' மற்றும் 'சுலக்ஷன்' ஆகியோரும் அந்த நேரத்தில் கரடுமுரடான தரையில் முன்னாள் இராஜாங்க அமைச்சரின் செயலால் அச்சமடைந்து, அவர்களது விருப்பத்திற்கு மாறாக அதே இடத்தில் மண்டியிட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளது.

மேலும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் 'F'பிரிவிற்க்கு சென்றுவிட்டு வெளியே வந்த பின், மீண்டும் முற்றத்தில் இருகின்ற கைதிகளை சந்தித்து, அனைவரையும் மண்டியிடும் படி சொல்லிவிட்டு, மீண்டும் ஒருமுறை 'சுலக்ஷன்', 'சூரியபாலன்' இருந்த இடத்திற்கு அருகில் சென்று மண்டியிட்ட சூரியபாலனிடம் 'உண்மை சொல்லு' என்று கூறினார்.''உண்மைதான் சொல்கிறேன், திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது, நண்பருக்கு உதவி செய்தேன்'' என்று சூரியபாலன் கூறியபோது, ''பொய்'' என்று கூறி தனது இடுப்பில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்ட முன்னாள் ராஜாங்க அமைச்சர் கைதிகள் பார்க்கும் வகையில் துப்பாக்கியை ஏற்றி, அதை கைதிகள் இருவரின் தலையை நோக்கி துப்பாக்கி குழலை வைத்தபடி முன்னாள் இராஜாங்க அமைச்சர், மேற்கூறிய துப்பாக்கியின் விசை வில்லில் தனது விரலொன்றை வைத்து சுட முயன்று இருந்தார்.

இச்சந்தர்பத்தில், அனுராதபுரம் சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர், முன்னாள் இராஜாங்க அமைச்சரின் கைத்துப்பாக்கியை பிடித்திருந்த கையை அல்ல, மறு கையை பிடித்துக்கொண்டு மேற்கண்ட நடவடிக்கையை தடுத்துள்ளார்.

அதனோடு நிருத்திக்கொள்ளாத முன்னாள் இராஜாங்க அமைச்சர் 'சூரியபாலன்' இருந்த இடத்திலிருந்து அவரை எழுப்பி அருகில் உள்ள வேறொரு இடத்திற்கு அழைத்துச் செல்லும் படி செய்து, அவ் இடத்திற்குச் சென்று சூரியபாலனை மண்டியிடச் செய்து முகமூடியைக் கழற்றச் சொல்லி , மீண்டும் முன்னாள் இராஜாங்க அமைச்சரிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து சூரியபாலனின் தலையில் காட்டி 'உண்மையை சொல்லுங்கள்' என மிரட்டினார். அச்சம் அடைந்த சூரியபாலன் இரண்டு கைகளையும் கூட்டிய படி அழுதுகொண்டே அவருக்கு திருமணமாகி குடும்பம் இருப்பதாக அவரிடம் கூறிய பிறகு அவ்விடத்தில் இருந்து நகர்ந்து சென்றிருந்தார்.

இவ் விஜயத்தின் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் வேறு எந்த நலன்புரி நடவடிக்கைகளிலும் மற்றும்/அல்லது வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

முன்னாள் இராஜாங்க அமைச்சரைச் சந்திப்பதற்காக 'F'பிரிவில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்ட கைதிகள், தாங்கள்

துன்புறுத்தலுக்கும்,வேதைகளுக்கும் ஆளானதாக அனுராதபுரம் சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர் மற்றும் பிரதம சிறைச்சாலைக்காவலரிடம் முறைப்பாடு செய்யாவிட்டாலும், குறித்த அதிகாரிகள் அருகில் இருந்துள்ளனர். மேலும், அதே நேரத்தில் மீண்டும் *'F'*பிரிவுக்குள் கைதிகள் சென்ற போது சம்பவத்தை, 'எப்' வார்டுக்கு பொறுப்பேற்று, இரவுப் பணியில் இருந்த சிறைக்காவலர் ஹேமபாலா அவர்கள் நடத்திய உரையாடல் மூலம் கேட்டறிந்தார். கைதிகள் எதிர்கொண்டனர். மேலும் தெரிந்து கொண்டது. மேலும், அதே நேரத்தில் மீண்டும் *'F'*பிரிவுக்குள் கைதிகள் சென்ற போது, அவர்கள் நடத்திய உரையாடல் மூலம், *'F'*பிரிவுக்கு பொறுப்பாளர், இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஹேமபால பிரியந்த குமார திஸாநாயக்கவும் கைதிகளின் கதையைக் கேட்டறிந்தார். அவருக்கு சம்வம் தெரிந்தபோதிலும் அவரும் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் மேற்படி கைதிகளுடன் இருந்த போது அனுராதபுரம் சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர், பிரதம சிறைச்சாலைக்காவலர் மற்றும் மூன்று சிறைச்சாலைக்காவலர்கள் அங்கு சுற்றித் திரிந்தாலும், முன்னாள் இராஜாங்க அமைச்சரிடம் துப்பாக்கி மற்றும்/அல்லது அது தொடர்புடைய ஆதாரம் எதுவும் வழங்கப்படவில்லை.

எவ்வாறாயினும், முன்னாள் இராஜாங்க அமைச்சரிடம் துப்பாக்கி இருக்கவில்லை என எந்தவொரு சிறைச்சாலை அதிகாரியும் அல்லது கைதியும் கூறவில்லை மற்றும்/அல்லது 'சுலக்ஷன்' மற்றும் 'சூரியபாலன்' ஆகியோர் மண்டியிட்ட இடத்திற்கு அருகில் சென்று அவர்களின் தலையில் துப்பாக்கியை காட்டி 'குற்றத்தை கூறுமாறு' வற்புறுத்தி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் எந்த வகையிலும் துப்பாக்கிச் சூடு நடத்தும் முயற்சி எடுத்ததாகவோ மற்றும்/அல்லது அது சாத்தியமற்றது என்று கூறவில்லை. அதன்படி, அந்த சம்பவங்களை கற்பனையாகக் கருத முடியாது.

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் மேற்கூறப்பட்ட கைதிகளுடன் இருந்தபோது, அங்கு சுற்றித் திரிந்த அனுராதபுரம் சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர் மற்றும் பிரதம சிறைக் காவலர் உட்பட ஏனைய அதிகாரிகள் பயந்தும்/அல்லது அழுத்தங்களுக்கு ஆளாகி மற்றும்/ அல்லது அக் காட்சியை பார்க்க முடியாது அங்கு இருந்ததாக, அப்படியே இருக்கும் நிலையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் துப்பாக்கி வைத்திருந்ததற்கு மற்றும்/அல்லது அதற்கான எந்த ஆதாரமும் வழங்கப்படவில்லை என்பதை நான் இங்கு அவதானிக்கிறேன்.

*'F'*பிரிவிலுள்ள *10* கைதிகள், முன்னாள் இராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, முன்னாள் இராஜாங்க அமைச்சரிடம் முன் வைக்கப்பட்ட வேளையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர்,

i. கௌரவ ஜனாதிபதியிடம் தெரிவித்து வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளதாகவும்,

ii. முன்னாள் இராஜாங்க அமைச்சர் குடிபோதையில் கைதிகள் முன்னிலையில் நடந்துகொண்டார் எனவும்,

iii. கைதிகள் பார்க்கும் வகையில் அவர் வசம் இருந்த துப்பாக்கியை இடுப்பில் வைக்கப்பட்டிருந்தது எனவும்.

iv. குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தி கைதிகளுக்கு முன்னால் துப்பாக்கியை வைத்திருந்ததாகவும்,

v. சூரியபாலன் மற்றும் சுலக்ஷன் ஆகிய இருவரையும் கரடுமுரடான தரையில் 2 மணி நேரத்திற்கும் மேலாக அவர்களின் விருப்பத்திற்கு மாறாக மண்டியிட்டு வைக்கப்பட்டதாகவும்.

vi. அப்போது தரையில் மண்டியிட்ட இரு கைதிகளையும் தனது துப்பாக்கியால் தலையில் சுட முயன்றார் எனவும்,

vii. கைதிகள் பீதியடைந்ததுடன், உடல் மற்றும்/அல்லது உளவியல் அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர் எனவும்,

இக் குழுவில் முன் வைக்கப்பட்டுள்ள தகவல்கள் "ஒறுசீரான விசாரணை ", "நிகழ்தகு விசாரணை" மற்றும் "உடனடி விசாரணை" ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளன.

எனவே, அவ் உண்மைகள் அனைத்தும் நம்பகமான உண்மைகள் என்றும் அவை கைதிகளால் உருவாக்கப்பட்ட கற்பனை கதை அல்ல என்பதை முடிவெடுக்க முடியும் என்பதையும் நான் அவதானிக்கின்றேன்.

முன்னாள் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சருக்கு 12.09.2021 அன்று அனுராதபுரம் சிறைச்சாலையின் 'F'பிரிவில் தங்கியிருந்த இராஜாங்க அமைச்சரிடம் ஆஜர்படுத்தப்பட்ட 10 கைதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில், வாய்மொழி மற்றும் எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்யும் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக பின்வரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படலாம் என அவதானிக்கப்பட்டது.

1. இலங்கைக் குடியரசின் அரச அமைச்சராக அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மற்றும் இலங்கைக் குடியரசின் கௌரவ ஜனாதிபதிக்கு அறிவித்து கைதிகளின் வழக்கு நடவடிக்கைகள்

முடிவுறுத்தப்படும் என்று அறிவித்தல் மற்றும்/அல்லது தெரியப்படுத்தும் வகையில் கௌரவ ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்வது மற்றும்/ அல்லது அரச மகத்துவத்தை இழிவுபடுத்தும் வகையில் நடந்துகொண்டு,

*(i)* கைதிகள் விடுவிக்கப்படலாம் அல்லது கொலை செய்யப்படலாம் என்று தெரிவித்தல்;

*(ii)* இரண்டு கைதிகளை மண்டியிட்டு கொலை செய்ய முயற்சித்தது தரையில் வைத்து அவர்களை தலையில் சுட்டுக் கொன்றது;

*(iii)* இரு கைதிகளை தரையில் மண்டியிட்டு, துப்பாக்கியால் தலையில் சுட்டுக் கொல்ல முயன்றது; பல்வேறு சட்டங்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட, 1916 ஆம் ஆண்டின் 33ம் இலக்க (182 அதிகாரம்) துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 44 (அ) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 118 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என குற்றம் சாட்டப்படலாம் என்பதையும்

2. மேலும், மேற்கூறிய (i) முதல் (vii) வரையிலான அவதானிப்புகளில் கூறப்பட்டுள்ளபடி,பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைக்கப்பட்டதாகக் கூறி நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் குடிமக்கள் குழுவிடமே முன்னாள் இராஜாங்க அமைச்சர் இவ்வாறு செயற்பட்டிருப்பதாலும், மேற்படி கைதிகள் கடும் சித்திரவதைக்கும், அச்சத்துக்கும், அடக்குமுறைக்கும் ஆளாகியிருப்பதால், தமிழ் மக்களின் எதிர்ப்பு உணர்வுகளைத் தூண்டிவிடவோ அல்லது தூண்டிவிட முயல்வதாக முன்னாள் அமைச்சரின் நடவடிக்கை இருப்பதாலும் மாண்புமிகு ஜனாதிபதியின் குடிமக்களுக்கு இடையில் வெறுப்பு அல்லது பகைமை மற்றும் முரண்பாடு போன்ற உணர்வுகளை ஊக்குவிக்கும் முயற்சியின் கீழ், பல்வேறு சட்டங்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட, 1916 ஆம் ஆண்டின் 33ம் இலக்க (182 அதிகாரம்) துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 44 (அ) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 120 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என குற்றம் சாட்டப்படலாம் என்பதையும்,

3. முன்னாள் இராஜாங்க அமைச்சர் தனது துப்பாக்கியை ஏற்றி, துப்பாக்கியின் தூண்டில் தனது விரல் ஒன்றை வைத்து "உண்மையைச் சொல்லுங்கள்" என்று மிரட்டிய படி, அனுராதபுரம் சிறைச்சாலையின் சந்தேகநபர் இலக்கம்: 140 - மதியரசன் சுலக்ஷன் மற்றும் சந்தேகநபர் இல: 363 - பூபாலசிங்கம் சூரியபாலன் எனும் இருவரது தலையிலும் துப்பாக்கி ஏந்தியதாகவும், அனுராதபுரம் சிறைச்சாலையின் உதவி அத்தியட்சகர், முன்னாள் இராஜாங்க அமைச்சரின் கைகளைப் பிடித்து அக்காரியத்தை தடுத்து நிறுத்தியதாகவும்,பல்வேறு

சட்டங்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட , 1916 ஆம் ஆண்டின் 33ம் இலக்க (182 அதிகாரம்) துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 44 (அ) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 300 இன் கீழ் 'கொலை முயற்சி என குற்றம் சாட்டப்படலாம் என்பதையும்,

4. சுலக்ஷன் எனும் நபரை கூழாங்கள், மணல், சிறு கற்கள் கலந்த தரையில் சுமார் 2 மணி நேரம் மண்டியிட வைத்து சிறு காயங்களை ஏற்படுத்தியதன் மூலம் தண்டனைச் சட்ட கொவையின் 314வது சரத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட முடியும் எனவும்,

5. சூரியபாலன் எனும் நபரை, கூழாங்கள், மணல் மற்றும் கற்கள் நிறைந்த கரடுமுரடான தரையில் கிட்டத்தட்ட 2 மணிநேரம் மண்டியிடச் செய்வதன் மூலம் தானாகவே காயம் ஏட்படுத்தி வைத்த குற்றத்திற்காக தண்டனைச் சட்ட கொவையின் 315வது சரத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட முடியும் எனவும்,

6. குறித்த சுலக்ஷன் மற்றும் சூரியபாலன் ஆகியோரின் தலையில் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தும் நோக்கில் அல்லது சட்டரீதியாக கட்டுப்படாத குற்றத்தை செய்யும்படி அவர்களை நிர்ப்பந்திக்கும் நோக்கில் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனும் அடிப்படையில் மேற்கூறப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட, 1916 ஆம் ஆண்டின் 33ம் இலக்க (182 அதிகாரம்) துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 44 (ஆ) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 486 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட முடியும் என்பதையும்,

மேலும், இலங்கை அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையின் படி, இலங்கை குடியரசின் சட்ட நிர்வாகமும் நடைமுறைப்படுத்தலும் நியாயமானதாகவும் சமத்துவமாகவும் இருக்க வேண்டும். அதேபோல், 11ம் உறுப்புரையின் படி, எந்தவொரு நபரும் சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படக்கூடாது.

மேலும், 13(2) ம் உறுப்புரையின் படி, சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி ஒவ்வொரு நபரும் தடுப்பு காவலில் வைக்கப்படவோ அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தை பறிக்கவோ கூடாது என்பதோடு மற்றும் 13(5) உறுப்புரையின் படி 'குற்றவாளி' என்று நிரூபிக்கப்படும் வரை ஒவ்வொரு நபரும் நிரபராதியென முன் யூகித்தல் செய்ய வேண்டும்..

I. சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வுக்கான முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கு போதுமான தகவல்கள் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில்,

*II.* சட்ட நிர்வாகம் மற்றும் பயன்பாடு மற்றும் சட்டத்தின் பாதுகாப்பு ஆகியன அனைத்து நபர்களுக்கும் நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதாலும்,

*III.* முன்னாள் இராஜாங்க அமைச்சரைச் சந்திப்பதற்காக *'F'* பிரிவுக்கு அருகிலுள்ள முற்றத்திற்கு அழைத்து வரப்பட்ட கைதிகளில் ஒருவரைத் தவிர, மற்ற கைதிகள் அனைவரும் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டப்பட்ட குற்றவாளிகள் என்று தகுதியான அதிகார வரம்பைக் கொண்ட நீதிமன்றத்தால் அறிவிக்கப்படாததால், அவர்கள் அச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றச்சாட்டுகளுக்கு 'நிரபராதி' எனக் கருதப்பட வேண்டும் என்பதாலும்,

*IV.* முன்னாள் இராஜாங்க அமைச்சர் உத்தியோகபூர்வ கடமைக்காக அனுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்ததால், *'F'* பிரிவின் கைதிகள் அவரிடம் ஆஜர்படுத்தப்பட்டிருந்தலும், மேற்படி கைதிகளை அச்சுறுத்துவதற்கு மற்றும்/அல்லது வற்புறுத்துவதற்கு, குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கு அல்லது சித்திரவதை மற்றும் சட்டவிரோதமாக தடுத்துவைத்தல் மற்றும்/அல்லது கொலை முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு சட்டப்பூர்வமான அதிகாரம் எதுவும் இல்லை என்பதால்,

- ❖ முன்னாள் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் திரு.லொஹான் ரத்வத்த அவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தமை தொடர்பில் இதுவரை இலங்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரனைகளுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்குமூலங்களினதும் முக்கிய விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட *'B'* அறிக்கை இதுவரை அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை என்றால், உடனடியாக அவ் அறிக்கையினை நீதிமன்றிடம் சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

- ❖ அனுராதபுரம் சிறைச்சாலைக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மேற்கொண்ட விஜயம் தொடர்பில் இலங்கை பொலிஸாரால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை விரைவாக முடித்துவிட்டு அடுத்தக்கட்ட மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும்.

- ❖ முன்னாள் இராஜாங்க அமைச்சரினால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் அனைத்துக் குற்றங்கள் தொடர்பிலும் உரிய அதிகார வரம்பிற்குட்பட்ட நீதிமன்றமொன்றில் குற்றப்பத்திரிகை அல்லது குற்றப்பகர்வுகளை

முன்வைக்க இலங்கை காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

- ❖ அனுராதபுரம் சிறைச்சாலையில் *12.09.2021* அன்று மாலை *5.45* மணி முதல் *7.00* மணி வரையில் கடமையாற்றிய அதிகாரிகள் இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளாக இருப்பதால், இச் சம்பவத்தில் அவதானித்த உண்மைத் தகவல்களை மறைக்காமல் அவர்களிடமிருந்து பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும்.

- ❖ அனைத்து சிறைச்சாலைகளிலும் உடனடியாக சி. சி. டி. வி. கேமரா *(C.C.T.V)* அமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

- ❖ சிறைச்சாலைகளுக்குள் நுழையும் ஒவ்வொரு நபரினதும் உடைமைகளை பரிசோதிக்கும் திறன் கொண்ட சிறப்பு ஸ்கேனிங் இயந்திரமொன்று பிரதான மர கதவு நுலைவாயிலுக்கு அருகில் நிறுவப்பட வேண்டும், மேலும் சிறைச்சாலைக்குள் நுழையும் ஒவ்வொரு நபரும் அந்த இயந்திரத்தின் வழியாக செல்ல வேண்டும்.

- ❖ பாரதூரமான குற்றமொன்றை புரிந்துள்ளதாக கடுமையான குற்றச்சாட்டை சுமத்தப்படக்கூடியவரான, முன்னாள் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்த தொடர்பில் கௌரவ ஜனாதிபதி அவர்களால் பொருத்தமானதாகக் கருதப்படக்கூடிய வேறு ஏதேனும் நடவடிக்கைகள் இருப்பின், அவற்றை உடனடியாக செயல்படுத்துவது பொருத்தமானது எனவும்,

- ❖ இக் குழுவால் கருத்துரைக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்ட்டு அறிக்கையிடப்படுகிறது.

*(*சரோஜனி குசலா வீரவர்தன*)*

ஒய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி,

தனிநபர் விசாரணைக் குழு,

*24.11.2021*